

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (19.6.2025) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் கட்டப்பட்டு வரும் இராஜாதோட்டம் திட்டப்பகுதியின் கட்டுமான பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்தஆய்வின் போது தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா , தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் (பொ) ஜி.எஸ்.சமீரன், . மண்டல துணை ஆணையர் பிரவின், திரு.வி.க நகர் மண்டல குழு தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை பொறியாளர் வி.எஸ்.கிருஷ்ணசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

### கரும்பு விவசாயிகளுக்கு

# சிறப்பு ஊக்கத் தொகையை விரைந்து வழங்க நடவடிக்கை எடுப்பீர்!

## ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 20-

சுற்றுலாத்துறை மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் தலைமையில் 19.6.2025 அன்று நடைபெற்ற கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் தொடர்பான செய்தி குறிப்பு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, சுற்றுலாத்துறை மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடியை அதிகரித்தல், சர்க்கரை ஆலைகளின் செயல் திறனை உயர்த்துதல், கரும்பு விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட சிறப்பு ஊக்கத்தொகையை விரைந்து வழங்குதல் மற்றும் அமைச்சரின் அறிவிப்புகளை விரைந்து செயல்படுத்துதல் குறித்தும் 19.06.2025 அன்று தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை வேளாண்மை, உழவர்நலத் துறையின் கூட்ட அரங்கில் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்களின் ஆய்வுக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வி. தட்சிணாமூர்த்தி, சர்க்கரைத்துறை இயக்குநர், வி.அன்பழகன், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் / சர்க்கரைத்துறை கூடுதல் இயக்குநர் பி. பாலமுருகன், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் திருமதி. டி.ரமணிதேவி, மாவட்ட வருவாய் அலுவலர், பொது மேலாளர் தமிழ்நாடு சர்க்கரைக்கழகம் திருமதி வி.மாலதி கூட்டுறவு /பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள், மற்றும் துறை சாா்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் கரும்பு சாகுபடியை அதிகரிக்கவும்,

சர்க்கரை ஆலைகளின் செயல் திறனை மேம்படுத்தவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக கரும்பு சாகுபடி பரப்பும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனும் அதிகரித்து வருகிறது. கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்காக அரசு தொடர்ந்து பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக 202425 அரவை பருவத்திற்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட சிறப்பு ஊக்கத் தொகையான டன் ஒன்றுக்குரூபாய்349/விரைந்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு அனைத்து அலுவலர்களையும் அமைச்சர் அவர்கள் வலியுறுத்தி கேட்டுக் கொண்டார். மேலும், அமைச்சர் அவர்கள் சிறப்பு ஊக்கத் தொகையை விரைவாக வழங்குவதன் மூலம், கரும்பு சாகுபடி பரப்பு அதிகரித்து, சர்க்கரை ஆலைகளின் செயல்திறன் மேம்படும் சூழ்நிலை உருவாகும் எனவும் தெரிவித்தார்.

கரும்பு விவசாயிகள் அதிக மகசூல் பெற்று அதிக வருவாய் பெற்றிடவும், கரும்பு அறுவடைக் கூலியை குறைத்திட அகலப்பார் முறையில் அதிக பரப்பளவில் கரும்பு சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக களப் பணியாளர்கள் விவசாயிகளை நேரில் சந்தித்து உரிய சாகுபடி தொழில்நுட்பங்களை எடுத்துரைக்கவும், கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தினார்கள்.

மேலும், அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் அனைத்திற்கும் அரசாணை பெறப்பட்ட நிலையில், அதனை உரிய நேரத்தில் செயல்படுத்தி, ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்திட சம்மந்தப்பட்ட செயலாட்சியர்கள் / தலைமை நிர்வாகிகள் உரிய நடவடிக்கைகளை

உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும், ஆலை பராமரிப்புப் பணிகளை சிறந்த முறையில் மேற்கொண்டு, 2025 26 அரவைப் பருவத்தை உரிய நேரத்தில் துவங்கி சிறப்பாக அரவைப் பணிகளை முடித்திடவும், நிலுவையில் உள்ள 5 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் இணைமின் திட்டத்தை துரிதப்படுத்தி, விரைவில் முடித்திடவும் உரிய நடவடிக்கைக்கள் எடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்கள். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக விஞ்ஞானிகள் மற்றும் சர்க்கரைத்துறை அலுவலர்கள், மகாராட்டிரா மாநிலம், பாராமதி பகுதிக்கு சென்று கண்டறிந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கரும்பு மகசூலை அதிகரிக்க பரிசோதனை வயல்கள் அமைப்பது குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

மேலும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் மற்றும் கரும்பு இனப் பெருக்க நிறுவனம், கோயம்புத்தூர் ஆகியவற்றுடன் இணைந்து அதிக பிழிதிறன் உள்ள புதிய கரும்பு இரகங்களை அதிக பரப்பளவில் சாகுபடி செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அரசு சார்பில் வழங்கும் பல்வேறு மானியங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு உரிய அறிவுரைகள் வழங்கினார்கள். மேலும் ஆலை செயல்பாடுகளை மேம்படுத்தவும் உரிய அறிவுரைகளை வழங்கினார்.

### நா.மோகன் தலைமை! துறைமுகம் மேற்கு பகுதி இளைஞரணி சார்பில்

# கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை!

சென்னை, ஜூன்.20-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், துணை முதலமைச்சர் - கழக இளைஞரணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில்

துறைமுகம் மேற்கு பகுதி இளைஞரணி சார்பில் திராவிட மாடல் ஆட்சியின் 4 ஆண்டு தனைகளை விளக்கி தெருமுனைக் கூட்டம் இன்று (20.06.2025) வெள்ளிக்கிழமை மாலை 06.00 மணியளவில் இலை கட்டு பிள்ளையார் கோவில், அண்ணா பிள்ளை தெரு, வரதா முத்தையப்பன் தெரு சந்திப்பில் துறைமுகம் மேற்கு பகுதி அமைப்பாளர் நா. மோகன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியை எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இரா.நரேந்திரன், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், இசட். ஆசாத், ப.ஸ்ரீராமுலு எம்.சி., ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் ராஜேஷ் ஜெயின் எம்.சி.,, வட்டச் செயலாளர் பா.அண்ணாதுரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வானவில் விஜய், துணை அமைப்பாளர் பா.ஜெகதீஷ், பொதுக் குழு உறுப்பினர் இரா. கலைச்செல்வி, கே.ஆர். அப்ரஞ்சி, டி.எஸ் சேகர், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அ.திருப்பதி. அ.ஆனந்த், எம்.சண்முகசுந்தரம், பா.அஜித் குமார், கே.ஆர். மணிரத்தினம், எம். கன்னியப்பன், எஸ்.ராஜு, எம். உதயா, எஸ்.முருகன் மற்றும் துறைமுகம் சட்டமன்ற தொகுதி சார்ந்த கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

### நே.சிற்றரசு - தயாநிதி மாறன் எம்.பி. - அன்பகம் கலை - எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. - கௌதமன் பங்கேற்பு !

# ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை அறிக்கை!

சென்னை, ஜூன் 20-

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் அறிவுறுத்தலின்படி சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதிக் குட்பட்ட வட்ட கழக செயலாளர்கள் கூட்டம் பகுதி அவை தலைவர் எம். ஆர். ஜம்புலிங்கம் தலைமையில் (20-06-2025) வெள்ளிக்கிழமை மாலை 6:00 மணிக்கு நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள பாம் குரோவ் ஓட்டலில் நடைபெறுகிறது,

இக்கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அனபுதுரை, ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் வெ.கௌதமன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், மாவட்ட கழக நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என்.துரை வி. எஸ்.கலை, சங்கீதா, மாவட்ட பொருளாளர் ஜெ.எஸ்.அகஸ்டீன்பாபு, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெ. நற்குணநாதன், பா.இராபட், எம்.வெற்றிசெல்வி, மாநில துணை செயலாளர் எஸ். என்.கே.அண்ணாதுரை, பகுதி கழக நிர்வாகிகள் கோ.ரவி.மு.வெங்கடேசன், டி.வைலட்மேரி, எம். ஜெயகுமார், வட்ட கழக செயலாளர்கள் ஆர்.பாபு, எப்.பீட்டர்ஜான், நுங்கை பா.மகேஷ், டி.தேவராஜ், எம்.என்.விஷ்ணு, எல்.தவமணி, எஸ்.சத்தியபெருமாள், கோ.யுவராஜ், எஸ். என்.கே.ராமன், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் துபாய் வி.ஆர். விஜய், லதா பிளாரன்ஸ், திருமலை பொன்னுரங்கம், எஸ்.செந்தில்குமார், மாவட்ட பிரதிநிதிகள் ஏ. கமலகண்ணன், ஜான் டி சில்வா, குணசேகர், பாட்ஷா சி.பாபு, சிவலிங்கம், வினோத், ஏ.வி.இராமநாதன், ஜெ.வரதராஜன், வேல்முருகன் பகுதி அமைப்பாளர்கள் புவனேஷ் ஸ்ரீவட்சன், தனசேகர், எஸ்.ஆனந்தி, இ.சத்தியா, ஸ்ரீராம், செல்வம், பங்கேற்கின்றனர்.

பொருள்:- வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் புதிய வாக்காளர் சேர்த்தல் வள்ளுவர் கோட்டம் திறப்பு விழா, கழக ஆக்க பணிகள்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கடலூர் கிழக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் காணொலி மூலம் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# உளறலும் ஒப்பாரியும் ஊர் ஆள உதவாது!

மதுரைக்கு வந்த ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அண்டப் புளுகுகளையும் ஆகாசப் புளுகுகளையும் அவர் பங்கிற்கு திராவிட மாடல் அரசுக்கு எதிராக அவிழ்த்துவிட்டுச் சென்றுள்ளார். எந்தப் பதவியிலும் இல்லாத அண்ணாமலையோ விரக்தியின் உச்சத்திற்கே சென்று வேதனை அம்புகளை தமிழ்நாடு அரசு என்கிற எஃகுக் கோட்டை மீது ஏவி விட்டு முனைமுறிந்ததைப் பார்த்து ஏமாந்து போய் நிற்கின்றார்.

தற்போதைய பா.ஜ.க தலைவரோ விரதம் இருக்க ஆரம்பித்துவிட்டார். மௌன விரதமா அல்லது பட்டினி விரதமா அல்லது 'ராமா, இந்த அண்ணாமலை தொல்லையிலிருந்து என்னை காப்பாற்ற மாட்டாயா என்பதற்கான விரதமா என்று தெரியவில்லை. ஆனால் அவரது நோக்கமோ முருகன் என்ற தமிழ் கடவுளை வைத்து 2026 தேர்தலில் திராவிட கட்சி தி.மு.கவை தோற்கடிக்கப் போகிறாராம். ஆப்பிரிக்கா ஆப்பிரிக்கர்களையே ஆளப்பட வேண்டும் நாட்டின் ஆட்சித் தலைமையில் அன்னியருக்கு இடமில்லை என்றார் நெல்சன் மண்டேலா. அதைப்போல் தமிழ்நாட்டை திராவிட கட்சிகள் தான் ஆளவேண்டும். நாட்டின் ஆட்சித் தலைமையில் தமிழருக்கு மட்டுமே இடமுண்டு அன்னியக் கட்சிகளுக்கு இங்கு இடமில்லை என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறோம்.

ராமர் கோயில் கட்டி அதன் திறப்பு விழாவிற்கு இந்திய குடியரசுத் தலைவராக பா.ஜ.கவினரே ஆக்கிய பா.ஜ.கவை சேர்ந்த திரௌபதி முர்முவை கூட அழைக்காமல் அப்படியே அழைத்தால் ஒருவேளை அம்மையார் வந்து விட்டால் ராமர் தீட்டாகிவிடுவாரே! காரணம் அம்மையார் முர்மு பழங்குடி இனத்தைச் சேர்ந்தவராயிற்றே என்று ஒதுக்கினர்.

அவர்கள் கூற்றுப்படி வாலியை கோழையைப் போல் மறைந்திருந்து தாக்கிய மாவீரனன்றோ ராமர். யாரோ தவறாகப் பேசினான் என்பதற்காக மனைவி சீதையை சந்தேகப்பட்டு தீயிலிறங்கி பத்தினித் தன்மையை நிரூபிக்கச் சொன்ன நீதிமானாயிற்றே கடவுள் ராமர். அந்த ராமருக்கு கோயில் கட்டுவதைத் தான் அத்வானி அரசியலாக்கி அவதார புருஷராக ரத யாத்திரை நடத்தி மத வன்மத்தைத் தூண்டிவிட்டு பா.ஜ.க.வை 2 எம்.பி.க்கள் என்ற இலக்கிலிருந்து இரட்டை இலக்கத்திற்கு கொண்டு வந்தார். இன்று அத்வானி இருக்கும் இடமே தெரியவில்லை.

அப்படிப்பட்ட ராமர் கோயில் கட்டப்பட்டுள்ள பூமிக்குத் தான் எந்த அம்மையார் முர்முவை பழங்குடியினர் என்று அழைக்க மறுத்தார்களோ அந்த ராமர் கோயில் இருக்கும் இடத்தில் மக்களோ அல்லது ராமரோ பா.ஜ.க வேட்பாளரைத் தோற்கடித்து தூர அடித்து விரட்டிவிட்டு ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சமாஜ்வாடி கட்சி வேட்பாளரை வெற்றி பெற வைத்திருக்கிறார்கள்.

குடியரசுத் தலைவராக ஒரு பெண்மணியை ஆக்கிவிட்டு தீட்டுப்பட்டு விடும் என்று ஒதுக்கியதற்கு தக்க பாடமாக தன்னை நிர்வாகிக்கும் தலைவராக ஒரு தலித் தான் இருக்க வேண்டும் என்று ராமரே உருவாக்கி விட்டார் என்பதை இனியாவது பா.ஜ.கவினர் ஏற்றுக் கொள்வார்களா?

புதிய மாநிலத் தலைவர் இருக்கும் போது எந்த பொறுப்பிலும் இல்லாத அண்ணாமலை எந்த அடிப்படையில் தன்னிச்சையாகப் பேட்டி அளிக்கிறார்? அவர் பேச்சை யாரும் பொருட்படுத்த வேண்டாமென்று முன்னாள் தலைவர் தமிழிசை சௌந்தர்ராஜனே கூறியிருக்கிறார்.

முதல்வர் தளபதி அவர்கள் போட்ட வேடம் டெல்டாக்காரன் வேடமாம். பல்லிளிக்கிறதாம். அண்ணாமலையே நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் டெல்டாக்காரர், டெல்டாக்காரர் தான். இது தமிழ்நாடு மக்களுக்கு தெரியும். விவசாயிகளை ஏமாற்றி விட்டாராம் ஒரு விவசாயி எப்படி மற்ற விவசாயிகளை ஏமாற்றுவார். முதல்வரின் தாத்தா பெரியவர் முத்துவேலரே முழுமையான விவசாயி தான். யாரைப் பார்த்து விவசாயியா என்று கேட்கிறீர்கள்?

சொல்லுங்கண்ணா சொல்லுங்கண்ணா என்று பேசினால் மட்டும் போதாது நீங்கள் உச்சரிக்கும் அந்த அண்ணாக்குள் ஆயிரம் விஷக்கிருமிகள் இருப்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும் சகோதரரே. இனியும் யாரும் உங்கள் அண்ணா பேச்சுக்கு ஏமாற மாட்டார்கள்.

விவசாயிகள் ஒன்றரை வருடமாக போராடினார்களாம் எங்கப்பா போராடினார்கள்? அவர்களது கடனை கழக அரசு தள்ளுபடி செய்யவில்லையா? இந்திய நாட்டில் விவசாயிகளுக்கென்று தனி பட்ஜெட் போட்டது யார்? நெல்லுக்கும், கரும்புக்கும் ஒன்றிய அரசு விலையை விட கூடுதல் விலையை தந்தது யார்? சட்டம் படித்த அதே வேளையில் நல்ல விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வத்தை அமைச்சராக்கி பல சலுகைகளை விவசாயி களுக்கு செய்ய வைத்தது யார்? எல்லாம் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தான். மாண்புமிகுவாக இருக்கும் போதும் என்றும் தந்தை பெரியார் வழியில் "சுயமரியாதைக் காரனாக" மானமிகுவாக இருப்பதையே விரும்புபவர் தான் தமிழ்நாடு முதல்வர் அவர்கள்.

உங்கள் ஒன்றிய அரசின் யோக்கியதைக் கூறட்டுமா? எம்.எஸ். சுவாமிநாதன் அறிக்கைப்படி குறைந்தபட்ச இரட்டிப்பு ஆதாரவிலை தருகிறோம் என்று ஆட்சிக்கு வந்துவிட்டு பின்பு அதை செயல்படுத்தாமல் விட்டது யார்? அதற்காக ஒன்றரை வருடம் மழையிலும், வெயிலிலும், பணியிலும் நின்று போராடிய லட்சக்கணக்கான விவசாயிகளை பறந்து பறந்து சுமார் 100 நாடுகளுக்கு சென்று வந்திருக்கும் பிரதமர் மோடி ஒரு முறையாவது சென்று பார்த்தாரா? பேசினாரா?

அந்தப் போராட்டத்தில் எத்தனை பேர் செத்தார்கள் தெரியுமா? 776 விவசாயிகள். அந்த குடும்பங்களின் நிலை என்னவென்று பிரதமர் மோடி விசாரித்திருப்பாரா? ஒரே நாள் ஒரே ஒரு நாள் விவசாயிகளை பார்த்தால் என்ன குறைந்து விடப் போகிறது? ஆண்டுக் கணக்கில் அமைதி இழந்து பலர் மடிய வன்முறை நடக்கும் மணிப்பூருக்கு பிரதமர் மோடி சென்றாரா? மணிப்பூர் என்ன பாகிஸ்தானிலா இருக்கிறது? இதற்குப் பெயர்தான் அதிகார ஆணவம். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் 400 என்று சொல்லி மெஜாரிட்டி கூட பிடிக்க முடியாமல் 240 மட்டுமே தந்த மக்கள் உணர்வுகளைக் கண்டும் இன்னும் பா.ஜ.கவினர் திருந்தவில்லையே! ஏன்?

விவசாயிகளுக்கு காவிரி ஆணையம் அமைத்தவர் யார்? பிரதமர் வி.பி. சிங்கிடம் பேசி காவிரி நடுவர் மன்றம் அமைத்தவர் யார்? இறுதி தீர்ப்பும் வாங்கியது யார்? முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்பதை கத்துக்குட்டி அண்ணாமலையே கற்றுத் தெரிந்து கொள்ளுங்கள். உழவர் சந்தை அமைத்ததும் கலைஞர் தான். சமீபத்தில் தஞ்சை சென்ற முதல்வர் எண்ணற்ற சலுகைகளை விவசாயிகளுக்குத் வழங்கி மகிழ்ந்தார். அறிவாலய செங்கல்லை உருவுவேன் என்றீர்களே! அண்ணாமலையே உருவி விட்டீர்களா? அண்ணா சாலைக்கு கூட வர தைரியம் இல்லையேப்பா! வாயைத் திறந்தால் பொய் பொய் தான். ஐ.பி.எஸ் படித்தவருக்கு இது அழகல்ல.

பா.ஜ.க தலைவராக வரும் முன்பு உங்கள் சொத்து என்ன? தற்போது எவ்வளவு? வெளியிடுவீர்களா? மனசாட்சியோடு உண்மையை வெளியிட வேண்டும். உங்களால் முடியவே முடியாது. கிடைத்த பதவியை விட்டு விட்டீர்களே! பாவம் இனிமேலாவது உண்மையைப் பேசுங்கள். அரசியல் பரபரப்புக்காக எதையாவது பேசாதீர்கள். உங்கள் தமிழிசையே உங்கள் பேச்சை அங்கீகரிக்கவில்லை.

பா.ம.க அப்பா மகன் பிரச்சனை தாங்க முடியவில்லை. குவித்து வைத்துள்ள சுமார் 1 லட்சம் கோடி (பத்திரிகையாளர் நக்கீரன் பிரகாஷ் கூறியுள்ளது) க்காக நடக்கும் சண்டை தான் என்றே ஊரே அறியும். அன்புமணி தன் தாயை பாட்டிலால் அடித்தார். என்னை அவமரியாதைப் படுத்தினார், பிளாக்மெயில் செய்கிறார். பொறுமை இல்லாதவர், தலைமையேற்க தகுதியற்றவர் அன்புமணி இவையெல்லாம் அவரது தந்தை மருத்துவர் ராமதாஸ் மகனுக்கு கொடுத்த சான்றிதழ். உலகம் அறிந்தது.

இதில் எங்கே தி.மு.க வந்தது? அன்புமணி சொல்கிறார் பா.ம.க தற்போதைய பிரச்சனைக்கு காரணம் தி.மு.கவாம். என்னப்பா? இது உங்களால் தரப்படும் கொசுக்கடி மிகப் பெரிய தொல்லையாக இருக்குதப்பா? உள்துறை அமைச்சர் எப்பொழுது மருத்துவரானார் என்று தெரியவில்லை. மக்கள் நாடித்துடிப்பைப் பார்த்தாராம் அதில் தி.மு.கவை விரட்டியடிக்கப் போகிறார்களாம் கூறியுள்ளார். எட்டு முறை பிரதமர் மோடி தமிழ்நாடு வந்தே ஒரு தொகுதியைக் கூட எட்டிப் பிடிக்க முடியவில்லை என்பதை மறந்து பேசுகிறார். அவர் சிந்தனையும் செவிகளும் தமிழ்நாட்டை நோக்கித் தான் இருக்கிறதாம். சரி முயற்சித்துப் பார்க்கட்டும்.

அமித்ஷா கூட்டணி ஆட்சிதான் என்கிறார். கூறி பத்து நாட்களுக்கு மேல் ஆகிறது எடப்பாடியார் நாவிலிருந்து இல்லை என்று ஓங்கி அல்ல சிறு முணுமுணுப்பாக கூட ஒன்றும் வரவில்லை. தேர்தல் வாக்குறுதிகளை 10஌ நிறைவேற்றி உள்ளது தி.மு.க அரசு என்றும் 100஌ தோற்ற அரசு என்றும் ஊழல் மிகுந்த அரசு என்றும் ஆத்திரத்தில் மனஅழுத்தத்தில் அவதூறுகளை அள்ளி வீசி விட்டுச் சென்றுள்ளார்.



**வி.பி.கலைராஜன்,**
கழக இலக்கிய அணிச் செயலாளர்

இதற்கு பதிலாக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா 98 விழுக்காடு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளோம். ஒரே மேடையில் விவாதிக்கத் தயாரா? ஆனால் இந்தியில் அல்ல என்று சவால் விட்டார். அமித்ஷா தரப்பிலிருந்து இதுவரை சத்தம் இல்லை. ஏன்? ஆ.ராசாவும் ஒன்றிய அமைச்சராக இருந்தவர் தான்.

நிதியை அள்ளி அள்ளித் தந்தார்களாம். எந்தெந்த துறைக்கு எவ்வளவு நிதி தந்தார்கள் அந்த ஒன்றிய அரசுத் திட்டங்களுக்கு தமிழ்நாடு அரசு எவ்வளவு நிதி தந்தது என்று விபரமாக கூறினாரா? இல்லை. கேட்ட பேரிடர் நிதியில் ஒரு சதவீதம் கூட இன்னும் கொடுக்கவில்லை. இந்தியை ஏற்றுக் கொண்டால் கல்வி நிதி தருவார்களாம். இந்தியை ஏற்றுக் கொண்டால் 10000 கோடி தந்தாலும் எங்களுக்கு வேண்டாம் என்றவர் எங்கள் முதல்வர். நாட்டில் கல்லாதவரே இல்லை என்ற நிலையை உருவாக்குவோம். ஆணுக்கு நிகராய் பெண்ணுக்கும் சமஉரிமை அளிப்போம் என்றார். வியட்நாம் விடுதலைத் தலைவர் ஹோசிமின். அதைத் தான் தந்தை பெரியாரும் சொன்னார். அதையே இன்று புதுமைப் பெண் மற்றும் தமிழ் முதல்வன் திட்டம் மூலம் நம்முதல்வர் செய்து வருகிறார்.

ஜாதி மோதலை ஏற்படுத்தப் பார்க்கிறதாம் தி.மு.க அரசு கூறியுள்ளார். பொறுப்பற்ற முறையில் அமித்ஷா பேசலாமா? சமூகநீதி, ஜாதி ஒழிப்பிற்கு வித்திட்டது திராவிட இயக்கம். பெரியார் மண் இது. சமஸ்கிருதத்தை முன்னிறுத்த முயல்வதே அவர்கள் நோக்கம். மூத்த மொழியாம் அனைத்து மொழிகளிலும் சமஸ்கிருதம் கலந்துள்ளதாம் அமித்ஷா ஏற்கனவே கூறியுள்ளார். தமிழ் தான் மூத்த மொழி என்று ஆங்கிலேயர்கள் கால்டுவெல், ஜி.யு.போப் போன்ற பலர் கூறியுள்ளனர். வரலாறு தெரியாமல் வாயாட வேண்டாம். அதுசரி கீழடி ஆய்வாளர் அமர்நாத்தை தற்போது ஏன் மாற்றினீர்கள்? தமிழர் நாகரிகத்தின் தொன்மை உலகிற்கு தெரிந்து விடக் கூடாது அதுதானே!

காலை உணவு ஒரு திட்டத்திலேயே சதம் அடித்தவர் எங்கள் முதல்வர். கிரிக்கெட்டில் டோனி போல் ஆட்சித்திறனில் ஆற்றலாளர் எங்கள் முதல்வர். பா.ஜ.கவினரே மீண்டும் 4 தொகுதிகளில் வெற்றிபெற முடியுமா என்று பாருங்கள். 2026 நிச்சயம் உங்களுக்கு நல்ல பாடம் புகட்டும்.

ஆளுநர்.ரவி கலைஞர் பல்கலைக்கழகத்திற்கு கையெழுத்துப் போட வில்லை. வேதாளம் மீண்டும் மரம் ஏறியுள்ளது. அதற்கு அறிஞர் அண்ணாவைப் போல் முதல்வர் பதில் கூறியுள்ளார். "றடைட றயவை வாறே கைபாவ" என்ன அழகு! பா.ஜ.க ஓடிசாவில் வெல்லலாம், ஹரியானாவில் வெல்லலாம், டெல்லியில் வெல்லலாம். ஆனால் தமிழ்நாட்டில் ஒருக்காலும் வெல்லவே முடியாது.